# இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889) ஆவணி மாதம் 28-ந் உ ஆரம்பமானது.

செவ்வாய் வெள்ளி தோறும் வெளி வருவது

Registered as a News Paper in Cey
P M G No. H A 59/300 of 1939

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத் - கூசு] யாழ்ப்பாணம்:- நந்தன வரு புரட்டாதிமீ ௩ உ வெள்ளிக்கிழமை (19 Sept. 1952) [இல - ௩௪]


# சத்தி வழிபாட்டுக்கு உகந்த காலம்

## ஒன்பது இரவுகளில் உலகன்னையை ஓம்பல்

"சொல்லும் பொருளு மெனநட மாடுந் துணைவருடன்
புல்லும் பரிமளப் பூங்கொடி யேநின் புதுமலர்த்தா
ளல்லும் பகலுந் தொழுமவர்க் கேயழி யாவரசுஞ்
செல்லுந் தவநெறி யுஞ்சிவ லோகமுஞ் சித்திக்குமே."



இன்று நவராத்திரி விரத ஆரம்பம். நவராத்திரி என்பது புரட்டாதி மாசத்து அமாவாசைக்கு அடுத்தகால தொடங்கியொன்பது நாட்களுக்குஇரவிலேஉமாதேவியார், துர்க்கை, இலக்குமி சரஸ்வதி ஆகிய சத்திகளுக்கு விசேட பூசை செய்து வழிபாடாற்றுதலாகும். பத்தாம நாள் விசயதசமியாகும். இத்தினத்தில் மானம்புவிழா நடைபெறும்.

மகிடாசுரன் என்பவன் தேவர்களுக்குப் பெரும் துன்பம் விளைத்து வந்தான். ஒரு நாள் அவனுடைய ஏவலாட்கள் வேட்டைக்குச் சென்றபொழுது தேவர்கள் அவர்களைக்கொன்றுவிட்டார்கள். அதை யறிந்து அவனுடைய படைத் தலைவன் சேனைகளுடன் சென்று போரிலிறந்தான். இதையறிந்த மகிடன் தானே போருக்குச் சென்றான். உமாதேவியாருடைய கட்டளைப்படி துர்க்காதேவி அவனைக் கொல்லும்படி எதிர்த்தபொழுது அவன் யானை குதிரை முதலிய உருவங்களைக் கொண்டு ஈற்றில் எருமைத்தலையோடு தோன்றத் துர்க்காதேவி அவனைக்கொன்று அவன் வேறுருக் கொள்ளாதவாறு தன் திருவடியால் அவன் தலையை மிதித்தருள அவன் நற்கதி அடைந்தான் என்பது இவ்விரதத்தைக குறிக்குக் கதையாகும்.

இங்கே அசுரன் என்பது ஆன்மாக்களின் அறிவை மறைத்துத் துன்பம் விளைக்கும் மலம் எனவும் அசுரன் கொல்லப்படுதல் மலநீக்கம் எனவும் அறிஞர் கூறுப. மலர் பல திறப்படுதல யானை குதிரை முதலிய உருவங்களாற் குறிக்கப்படும்.

ஆணவ மலத்தின் அறிகுறிகளாகிய நான் எனது என்னும் அகங்கார மமகாரங்கள் வலியுற்று எம்மவரை இக்காலத்தில் இறைப்பொருள் என்று ஒன்று இன்றென்றே இறுமாந்து நின்று அந்தகாரத்துள் துன்புறச் செய்கின்றன. இணுக்குண்டுக்கும் அது விளைக்கும் அச்சத்துக்கும் அது ஏதுவாகின்றது. நிலையிலா உலகப்பொருள்களை நிலையினவென நினைக்கச் செய்து நிலைகுலைக்கின்றது. இன்ன பிறவாகும் இழிந்த நிலைகளெல்லாம் ஆணவமாகிய மகிடாசுரனால் விளைக்கப்படுவன. ஆகவே இவ்விரதத்தை அன்புடன் அநுட்டித்து அம்மை அருள் பெற்று மகிடாசுரனாகிய ஆணவத்தின சேட்டைகளை அகற்றி அறிவு விளங்கி இன்புறுவோமாக.

# யோகிஸ்ரீசுத்தானந்தபாரதியார்

## வரவேற்புக் கூட்ட ஒழுங்கு

சென்ற நான்குமாதங்களாக மலாயா, தைலாந்து முதலாய நாடுகளில் அரிய சமயப்பணி செய்துவிட்டு, தற்போது யப்பானில் தங்கியிருந்து ரோக்கியோ சர்வகலாசாலையிலும் வேறு இடங்களிலும் சித்தாந்த தத்துவம், சுத்த சன்மார்க்கம், யோகசித்தி முதலாய விடயங்கள்பற்றி உபந்நியாசங்கள் செய்யும் யோகி சுத்தானந்தர் அவர்கள் அடுத்தமாதம் இலங்கை மார்க்கமாகத் தாய்நாடு திரும்பும்போது கொழும்பிலே அவருக்கு வரவேற்பளிப்பதை ஆலோசிக்கும் பொருட்டுக் கொள்ளுப்பிட்டியில் ஓர் கூட்டம் நடைபெற்றது. ஸ்ரீமதி வைத்தியநாதன், ஸ்ரீமதி சிவானந்தம் தம்பையா, ஸ்ரீமதி கிரிசா சரவணமுத்து, சேர். கந்தையா வைத்தியநாதன், திருவாளர்கள் M. கனகசபை P. ஸ்ரீஸ்கந்தராசா, சு. சிவசுப்பிரமணியம், K. V. S சுந்தரம், M. இராசநாயகம், பண்டிதர் K. P. இரத்தினம், S. U. சோமசேகரம், V. அல்லிராசா, K. பொன்னையா ஆகியோர் உட்படப் பலர் சமுகமளித்தனர்.

சுவாமிகள் கொழும்பு சேர்ந்த அடுத்த தினமே வரவேற்புக் கூட்டத்தை வைப்பது உசிதமெனக் கருதி 20-10-52 நிச்சயம் பண்ணப்பட்டது. ஆக வேண்டிய ஒழுங்குகள் செய்வதற்கு சேர். கந்தையா வைத்தியநாதனைத் தலைவராகவும், திரு. க. இராமச்சந்திரனைக் காரியதரிசியாகவும், திருவாளர்கள் M. கனகசபை, P. ஸ்ரீஸ்கந்தராசா, K. வைரவிப்பிள்ளை, சு. சிவசுப்பிரமணியம K. V. S. சுந்தரம், A. ஜீவரத்தினம், S. இராசசூரியர் ஆகிய எழுவரையும் கொண்டநிர்வாக சபை நிறுவப்பட்டது. கொழும்பிலுள்ள வெவ்வேறு சங்கங்களுக்கெழுதி அவற்றின பிரதிநிதிகளையும் வரவேற்புக் குழுவிற் சேர்த்துக் கொள்வதாகத் தீர்மானிக்கப்பட்டது. நிர்வாகசபையின் அடுத்த கூட்டத்தை 24-9-52 புதன்கிழமை கூடுவதாகவும் தீர்மானிக்கப்பட்டது.

## நெல் விலை

நெல்விலை புசலொன்றுக்கு ரூபா 12 ஆக்குமாறு அரசாங்கம் தீர்மானித்திருக்கின்றது.

அரசியலலை

# சிக்கனம் வேண்டும் என்கிறது அரசாங்கம்

## 'யார் முன்மாதிரி காட்டவேண்டும்'? என்கிறது பொதுசனம்

பொருளாதார நெருக்கடியால் இலங்கை வறுமையடையா திருக்க வேண்டுமேயானல் அனவசியமான அரசாங்கச் செலவுகளைத் தவிர்த்து விட வேண்டும் என்கிறார் பிரதமர்.

மிகவும் புத்திசாலியான பேச்சு. அநாவசியச் செலவு எங்கே நடைபெறுகிறது? உள்நாட்டிலா புறநாடுகளிலா?

வைத்திய வசதிகள் கல்விச் சாதனங்கள் பயிர்ச் செய்கைக்குரிய உபகரணங்கள் காடு வெட்டல் திருத்துதல் குளங்கள் புதுப்பித்தல் இவைகளைத் தவிர்ப்பதா? அல்லது அயல நாடுகளுக்கும் புற நாடுகளுக்கும் அரிசி எண்ணெய் சீனி முதலியன பெற்றுக்கொள்ளப் பேச்சு நடத்தச் செல்லும் பெருந்தொகைக் குழுவினரின் செலவைக் குறைப்பதா?

அரிசி பெறவேண்டும், அயல் நாடுகளிற் பெறவேண்டும. சீனு பர்மாவிற் கொள்ளுதல் அவசியம். ஆனல் அதற்காகத் தூதுக்குழுவினர் நாடகக் கூட்டத்தவர்கள் விளையாட்டுப் போட்டியினர் போன்று பலர் செல்லவேண்டுமா? ஒரு புறநாட்டுப் பிரதிநிதியால் இது முடியாதா? அல்லது அப் பிரதிநிதியுடன் ஒரு அமைச்சர் சென்றாற் போதாதா?

'சுண்டக்காய் காற்பணம் சுமைகூலி முக்காற்பணம்' என்றவாறு அரிசிபெறுவது, அளவு சிறிது வருஞ் செலவோ பெரிது,

உண்மையாக ஊரவர்கள் சிக்கனமாக வாழவேண்டும் என்றால் அரசாங்கம் வீண் செலவு செய்யாதிருத்தல் வேண்டும். நோயாளிகளுக்கு வைத்திய வசதிகளைச் செய்யாதுவிட்டு மேனாடுகளுக்குத தூதுவர்களைக் குபேரசம்பத்துடன் அனுப்புவது [illegible] விளையாட்டுப் பரிவாரங்கள் அறிவுச்சிக்கனம ...

## உன்னை அடைந்தார் வினைகள் அகல அருளாயே

திருச்சிற்றம்பலம்.

துருத்திச்சுடரேநெய்த்தானத்தாய்சோல்லாய்கல்லாலா
பருத்தநியமத்துறைவாய்வெயிலாய்ப்பலவாய்க்காற்றானாய்
திருத்திதருத்திவந்தென்சிந்தையிடங்கோள்கயிலாயா
வருத்தித்துன்னையடைந்தார்வினைகளகலவருளாயே.

திருச்சிற்றம்பலம்,

## அரிசி அளவு

வருகிற திங்கட்கிழமை தொடக்கம் ஒவ்வொருவருக்கும காற்படி அரிசி குறைத்துக் கொடுக்க அரசாங்கம் தீர்மானித்திருக்கின்றது. இதனால் ரூபா 60 000,000 அரசாங்கத்துக்கு இலாபம் வருமாம்.

# வாரிவளம் கூறிய வள்ளுவர்

வித்துவான் த. வடிவேலு

உலகிற்கு ஒருமுதல்வனுள னென எம்முன் காட்டி அவன் முதலாக நின்றியங்கு முறையினை நாமும் அறிந்துய்யவேண்டுமென விழைகின்றார். அவ் விழைவின் பயனாக உலகு நடைபெற இன்றியமையாப் பொருளான மழையின் சிறப்புரைக்கின்றார்:

'வானின்றுலகம் வழங்கி
வருதலாற்
றானமிழ்த மென்றுணரற் பாற்று''

அமுதம் இறவா இன்பமளிக்குமுணவு. மழையோ உலக உயிர்களனைத்தையும் இறவாமற் காக்கின்றது. வாடிய பொருள்களனைத்தையும் செழுமையடையச் செய்கின்றது. மழையற்ற இடத்தில் உயிர்களில்லை! உலகமனைத்திலுமே மழையில்லையானால் உலகில் உயிர்ப்பொருளில்லை. உயிர்ப்பொருளின்றேல் அதனை உலகமென் றழைக்கும் மனிதன் எங்கிருப்பான்? அப்பொழுது உலகமேயில்லை. உலகம் நிலைபெற மழையே இன்றியமையாப் பொருளாகும் [illegible] அமுதம். மழையோ உலக உயிர்களனைத்தையுமே சாவாது உயிருடன் வாழச்செய்கின்றது அமுதம் தேடிப் பெறுவோரையே சாவாது நிலைபெறுத்துகின்றது. மழையோ தானாகவே தேடிவந்து உதவுகின்றது. இருந்தும், அமுதத்தின் மிக்க உவமை காணமுடியாத நிலையிலேயே இரண்டன் பயனும் ஒத்த தன்மை கொண்டு உலகிற்கு மழை அமுதமென்று யாம் கருதல் வேண்டும் என்கின்றார்.

"துப்பார்க்குத் துப்பாய துப்
பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉ மழை"

உண்போர்க்கு வேண்டிய உணவுகளை விளையச் செய்கின்றது மழை. அவ் வுணவுகளை உண்போர்க்கு விடாய் நீக்கும நீராகவும் உதவுகின்றது மழை.

'விண்ணின்று பொய்ப்பின்
விரிநீர் வியனுலகத்
துண்ணின் றுடற்றும் பசி'

இவ் வுலகு பரந்த கடலாற் சூழப்பட்டுள்ளது. மழையில்லையானால் அக் குறையை நிறைவேற்றும் மாண்பு கடல் நீருக்கில்லை. கடலின் நீர் மிகுதியாகக் காணப்படுகின்றது ஆனாலும் அது தான் பெற்ற உவர்த் தன்மையால் மழைநீராகும் ஆக்கத்திற்கிணையாகின்று வினையாற்றும் மாணபினை இழக்கின்றது. வேண்டிய காலத்தில் மழையில்லையானால் விளைவில்லை, விளைவில்லையானால் உணவில்லை... உணவில்லையானால் உயிர்களனைத்துமே பசியால் வருந்துவதன்றி பசிநீங்கும் வழியில்லை. அந் நிலைமை நீடிக்குமானால் உயிர்ப் பொருள்களனைத்துமே இறந்தொழியும்.

"ஏரி னுழாஅ ருழவர்
புயலென்னும
வாரி வளங்குன்றிக் கால்"

மழையில்லையானால் பயிர்முளைத்தலே இல்லை. எனவே உழவரும் மழையில்லாவிடத்து விளைவில்லையென உணர்ந்து வித்திடற்கு முதற் செய்யவேண்டிய உழவு தொழிலையே செய்யாது விடவேண்டியதாகின்றது.

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழக அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரனாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.


# இந்துசாதனம்

யாழ். நந்தன ௵ புரட்டாதி௴ ௪ ௨ வெள்ளிக்கிழமை


## பயிரிடுவோருக்குப் பலன் போதுமா?

நாற்காலியி லிருந்தவண்ணமே நாற்றிசையிலும் வியாபாரஞ் செய்கின்றார்கள், நூற்றுக்கணக்கான பொன் கொடிப் பொழுதில் தேடிக் கொள்கின்றார்கள். ஆனால் அவர்கள் தாம் உண்ணும் உணவை உண்டு பண்ணுகிறவர்கள் எவ்வாறு வெயில் காற்றுப் பனி மழை முதலியவற்றாலே தாக்குண்டு நித்திரையின்றி ஒரு நாடிப் பொழுதும் ஓய்வின்றி முயன்று நிலத்தைப் பண்படுத்தி உழுது பயிரிட்டுக் களை பிடுங்கி நீர்ப்பாய்ச்சிக் கதிர் அரிந்து போர் அடுக்கி நெல்லாக்கித் தருகின்றார்கள் என்று நினைப்பதே கிடையாது. நன்றாக உண்பார்கள் ஆனால் பயிரிடுபவருக்குப் போதிய ஆதாயம் பெறக்கூடிய வகையிலே தானியங்களுக்கு விலை கொடுப்பதென்றால் பெருமூச்சு விடுவார்கள்.

நெல்லு நிறைந்த களஞ்சியமாக விளங்கிய இலங்கைத் தீவிலா அரிசிப் பஞ்சம் வருவது? அந்தக்காலத்திலே நெல் விளைவியாத் தேசங்கள் எல்லாம் இப்போது இத் தானியத்தை எண்ணிறந்த பரப்பு நிலங்களில் விளைவிக்க, இந்நாட்டில் அவ்வாறில்லாதிருப்பதற்குக் காரணம் என்ன? கமக்காரன் நெற் செய்கையால் பண நெருக்கடிக்குள் ஆளாகி வறுமையின் கையிலகப்படுகின்ற நிலைமை வந்துவிட்டது. நிலமுடைய செல்வர்கள் நிலா முற்ற மாட மாளிகையில் உட்கார்ந்து கொண்டிருக்க, அவர்களிடம் கூலிக்கு நிலம் வாங்கிப் பயிரிடுகின்றவன் தன் இரத்தத்தை நீராக்கி இறைத்துவிட்டு ஈற்றிற் பசியால் வாடிப் பிணியால் மடியவும் காணிக்காரர்கள் குத்தகைப் பணத்தைக் கொடுங்கோல் முறைப்படி பெற்றோ அல்லது விளைந்த நெல் முழுவதையும் அபகரித்தோ விடுவதினாலே பயிரிட யார் முன் வருவார்கள்? மாதம் மும்மாரி வழங்குகின்றதா, ஆறு குள நீர்ப்பாய்ச்சல் வசதி இருக்கின்றதா சொந்த நிலமுண்டா? இந்த நிலைமையிலே உழுதுண்டு வாழ்வதெங்ஙன்?

பயிர்ச் செய்கைக்கே நாட்டின் வருவாயை அப்படியே செலவு செய்து விடுவோம் என்று அரசாங்கம் காதல்மொழி பேசுவதல்லாது உண்மையாக உழுது பயிரிட வல்லார்களுக்கு நிலமும் உபகரணமுங் கொடுத்து உதவுகின்றதா? அல்லது அவ்வாறு உண்டாக்கப்பெற்ற நெல்லுக்குப் போதிய விலை கொடுத்துவாங்குகின்றதா? பரப்புக் கணக்கான பரந்த நிலங்களை யெல்லாம் பணம் படைத்த செல்வர்கள் பெறுகிறார்கள். பெற்று என் செய்கிறார்கள்? ஏர் பிடிக்கத் தெரியாதவர்கள், மண் வெட்ட அறியாதவர்கள், வெயில் மழைக்காற்றாதவர்கள், கமத்தைக் கண்ணாலுங் காணாதவர்கள் இவர்கள் கமக்காரர்களாம்! ஏழைத் தொழிலாளர்களை வருத்தி வேலை செய்வித்து விளைந்த தானியங்களை விற்றுக் குபேரர்களாகி விடுகிறார்கள். உழுது விதைத்து நெல் பெற்றுக் கொடுத்தவர்கள் பசியால் வாடி அழுதழுது சீவிக்கிறார்கள். என்னே நீதி. என்னே நியாயம்!

இது தவறு, இது முறையாகாது. ஆருக்கு நிலங் கொடுப்பதனால் நாட்டுக்குப் பலனுண்டென்பதை எப்போதாவது அமைச்சர்கள் ஆலோசித்தார்களா? ஆலோசிப்பார்களா? போனது போகட்டும், ஒவ்வொரு உழவுத் தொழிலாளிக்கும் நூறு பரப்புக் காணியும் நீர்ப்பாய்ச்சல் வசதியும் பண உதவியுங்கொடுத்து அவன் விளைவிக்கும் நெல்லுக்கு நியாயமான விலைகொடுத்து வாங்கி வரக்கூடிய ஒரு திட்டத்தை உண்டுபண்ணிச் சட்டமாக்கிவிட்டால் ஈழநாடு அன்றிருந்ததுபோல் இன்றும் ஏர் பொலிந்து சிறந்து தெய்வப் பூமியாகத் திகழமாட்டாதா?

## ஆசிய மக்களின் தேசீய உணர்ச்சி

ஆசியாவிலும், தூரக்கிழக்கு நாடுகளிலும்உள்ள மக்களுக்கு அவர்களுடைய பொருளாதார சமூக சேமாதார பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்கான பொருள் உதவியை அமெரிக்கா அளிக்கவேண்டும் என்றும், நியாயமானதும், நிலைத்து நிற்கக்கூடியதுமான உலக சமாதானத்துக்கு, சுதந்திர உலகைப் பொறுமையோடு பாடுபட்டு வலிமை மிக்கதாகச் செய்ய வேண்டும் என்றும். இங்கு ஒருகூட்டத்தில் பேசும் பொழுது ஜனாதிபதி தேர்தலில் ஜனநாயகக்கட்சி அபேட்சகராகக்கலந்துகொள்கிற அட்லி ஸ்டீவன்ஸன் வற்புறுத்தினர். அவர் மேலும்பேசும்பொழுது "ஆசியகண்டத்திலே, கோடிக் கணக்கான மக்கள், அரசியல், பொருளாதார, ஆன்மீக உயர்வும், விடுதலையும் நாடிப் போராடுகிறார்கள். அவர்கள் வேண்டுவன: கண்ணியமான வாழ்க்கையும், விடுதலை இன்பமுமே தங்கள் உள்ளக்கிடக்கையை வெளியிட ஆசியர்கள் அடிக்கடி உபயோகிக்கும் வார்த்தை தேசீயம் என்பது. காலூன்றி நிற்பதற்கு ஒரு வாய்ப்பு, தேசிய மென்பது ஆசியர் கருத்து. தங்களைத் தாங்களே ஆண்டுகொள்ள விரும்புவதே தேசீயம். தாங்களாகவே தங்கள் செல்வ நிலையை உயர்த்திக்கொள்ளத் தருணம் வேண்டி நிற்பதைத் தேசீயம் என்ற சொல்லினால் அவர்கள் உணர்த்துகின்றனர். எங்கள் தோல் என்ன நிறமாயிருந்தாலும், சுதந்திரமாக நடமாட உலகிலே எங்களுக்கு உரிமையுண்டு என்பதை எடுத்துரைப்பதுவே அந்தத் தேசியம். மனிதனுக்கு மனிதன் உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்ற வேறுபாட்டுக்கு முற்றுப்புள்ளியே அவர்கள் தேசியம். ஆசியர் தேசியஉணர்ச்சி என்பது அவர்களுடைய உள்ளத்தின் நம்பிக்கை ஒளி, திட உறுதி, ஒரு பெருமிதம்.

இவ்வித தேசிய உணர்ச்சியான நாடுகளுக்கிடையே ஒத்துழைப்பை வளர்ப்பதிலும் உறுதிப்படுத்தக்கூடிய சமாதானத்தை உருவாக்குவதிலும் குறுக்குக் கட்டையாக இராது என்பது நிச்சயம். விடுதலையும், தேசிய சுதந்திரமும், சர்வதேச ஒழுங்கு நிலவச் செய்ய முதற்படி என்றே நம்மைப்போல ஆசியரும் உண்மையாகக் கருதுகின்றார்கள்.

தூரக்கிழக்கில் அமெரிக்கா பின்பற்றும கொள்கையைக் குறை கூறுகிறவர்கள் ஆசியாவில் தங்களுக்குள்ள அக்கறையை நிரூபணம் செய்ய, நேற்றைய சீனத்தைப்பற்றி கதைப்பதைவிட, இன்றைய இந்தியாவுக்கு உருப்படியான காரியம் செய்வது மேலானது. இந்தியா உள்நாட்டுக் கலகத்தில் சிக்கித் தவிக்கவில்லை. நமக்கு இயல்பாகவும், அவர்களுக்குச் சிறந்ததாகவும் அமைகிற மேலான முறையில் இந்தியாவுக்கு உதவி செய்ய நம்மால்முடியும். இந்தியா செயற்படுத்தும் அபிவிருத்தித் திட்டங்களுக்கு, சனநாயகம் கைகொடுத்து உதவ வேண்டும். அதுவே அதனுடைய தேவை. மற்ற நாடுகளின் நிலைமையும் அதைப் போன்றதே. விவசாய நிபுணர்கள், பலவிததொழில் நிபுணர்கள், தொழில்தேர்ச்சி பெற்ற உதவியாளர் இவர்களை அனுப்புவது போன்ற உதவியை நாம் செய்யமுடியும்.

அமெரிக்காவின் பொருளாதார சகாயத் திட்டங்கள், பிற தேசங்கள் மீது நம் தேச சமூக வாழ்வைச் சுமத்துவது அலலவே அல்ல என்று ஆசியாவில் உள்ள என்னுடைய நண்பர்களுக்கு அழுத்தம்திருத்தமாக உறுதிகூற விரும்புகிறேன். ஆசியர்களுக்கு ஒன்றைச் சொல்லிக் கொடுக்கும் போது அவர்களிடமிருந்து ஒன்றைக் கற்றுக்கொள்ள நாங்கள் விரும்புகிறோம்.

பொதுவுடைமை உலோகாயதவாதத்துக்குப் பதில், இன்னொருமாதிரி லோகாயதவாதம் அல்ல. அந்தத் தவறை நாங்கள் நன்றாக உணர்ந்திருக்கிறோம். ஆகவே பொதுவுடைமைக்கு மாற்று என்ன? நல்ல செய்கைகள்தான் மாற்று அல்லது பதில். விடுதலையோடு வாழப்பிறந்தவன மனிதன் என்ற தர்மத்துக்கு இசைய, மனிதகுலத்துக்கு நற்பணிபுரிவதே பொதுவுடைமை தலையெடுக்காமற் செய்ய வழி.

## சேர். G. விஜயக்கோன் அவர்கள் பிரிவு

அரசாங்க மேற்சபை (Senate)த் தலைவராகிய சேர் விஜயக்கோன் அவர்கள் சென்ற புதன்கிழமை இவ்வுலக வாழ்வை நீத்தாரென அறியவருகின்றது.

இவர் இலங்கையின் பல திறப்பட்ட அரசியலில் முன்னேற்றங்களுக்கும் அவற்றின் விளைவான சுதந்திரத்துக்கும் உழைத்த பெருமை வாய்ந்த தலைவர்களுள் ஒருவர். இவர் சட்டசபை அங்கத்தவராகவும் அரசாங்க நிருவாகசபை அங்கத்தராகவும், தொண்டாற்றியவர். இப்போ அரசாங்க சபைத் தலைவராகச் சிறந்த தொண்டாற்றி இவ்வுலகைவிட்டேகினர்,

## பாரதி விழா

வட்டுக்கோட்டை இளைஞர் உடலுள விருத்திச் சங்கத்தினரால் (11-9-52) வியாழக்கிழமை பிற்பகல் வட்டுமேற்கு சுப்பிரமணிய வித்தியாசாலை மண்டபத்தில் பாரதியார் திருநாள் இனிது கொண்டாடப்பட்டது. அவ்வமயம் சங்கத்தலைவர் திரு. க. கணேசராசா அவர்கள் தலைமைதாங்கினர். ஆசிரியர் திரு. சி. பரமசாமி அவர்கள் "பாரதியுகம்" என்னும பொருளபற்றி விரிவுரை ஆற்றினர். பின்பு சங்க உறுப்பினரால் பல்வேறு நிகழ்ச்சிகளும்; சங்க அங்கத்தவராகிய திரு. இ. மகாகணபதிப்பிள்ளை அவர்கள் எழுதிய "புதிய வாழ்வு" என்னும் நாடகமும் இனிது நடந்தேறின.

## ஆன்மஈடேற்றத்துக்கு அரன்வழிபாடு அத்தியாவசியம்

### அது அகம் புறம் என்று இரு வகைத்தாகும்

ஸ்ரீ சி. கணேசலிங்கஐயர்
தெல்லிநகர்.

உலகில் மானிடப் பிறவி எடுத்த மக்கள் அனைவருக்கும் அவர்களின் ஆன்ம ஈடேற்றத்துக்கும் சரீர சுகத்துக்கும் அவசியம் வேண்டப்படுவது கடவுள் வழிபாடாகும் மனித சரீரம் படைத்த ஒருவன் கடவுள் வழிபாடு செய்யாது வாழ்வானேயானல் அவன் வாழ்வு மண்ணுவது திண்ணம். இன்னும் ஆராயுமிடத்துச் சமய குரவர்கள், சேக்கிழார், கச்சியப்ப சிவாச்சாரியார், திருவள்ளுவர் ஆதியாம் பெரியோர்கள் எல்லாம் எக்காரியத்திற்கும் கடவுள் வணக்கத்தையே முதலாகக் கொண்டார்கள். இதனால் கடவுள் வணக்கத்தின் அவசியம் நன்கு புலப்படும்.

கடவுளை வழிபடுவதற்கு எமக்கு முக்கியமாக இரு இடங்கள் அமைந்துள்ளன. அவைகளுள் ஒன்று "அகம்" மற்றது "புறம்" அகமாவது உள் அல்லது மனம் எனப் பொருள்படும். மனத்திலே கடவுளை வழிபடும்போது அப்பெருமான் உயிரை இடமாகக்கொண்டு அவ்வழிபாட்டை ஏற்று அருள் புரிவர். அகத்தில் செய்யும் வழிபாட்டின் முறையைத் திருநாவுக்கரசு சுவாமிகள் தமது தேவாரத்தில் மிகத் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளார், அப்பாடலைப் படித்து இன்புறுவோமாக.

"காயமே கோயிலாகக்
கடிமனமடிமையாக
வாய்மையே தூய்மையாக
மனமணி இலிங்கமாக
நேயமே நெய்யும் பாலா
நிறையநீ ரமைய ஆட்டிப்
பூசனை ஈசனுர்க்குப்
போற்றவிக் காட்டினோமே"

மற்றது புறம் அஃதாவது மனத்திற்குப் புறம்பாக உள்ள திருக்கோயில்களையும் சிவனடியார்களையும் குறிக்கும்.

ஆன்மாக்களாகிய நாம் ஆணவம் என்னும் கொடிய வியாதியினால் பீடிக்கப்பட்டிருக்கின்றோம். அந்த வியாதியை மாற்றுவதற்காகவே கடவுள் நமக்கு இந்த உடம்பைத் தந்திருக்கின்றார். இதனால் அவருக்கு "வைத்தியநாதன்" என்ற பெயருண்டு. நாம் தினந்தோறும் கடவுளை வழிபட்டு அவருக்குத் திருத்தொண்டு செய்து வருவோமானல் அவர் நமது ஆணவ இருளைப் போக்கி மெஞ்ஞானம் எனப்படும் திருவருளைக் கொடுத்தருளுவர். கடவுளை வணங்கும்போது ஆண்டவனே! பரம்பொருளே! தீனதயாநிதியே! கருணைக் கடலே! தேவாதி தேவனே! அடியார்க்கெளியானே! வேண்டுவார் வேண்டுவதை ஈந்தருளும் பெருமானே! அடியேன் செய்த, தீவினைகள் அனைத்தையும் மன்னித்து எனது ஆன்மாவை ஈடேற்றிவிடுக! என்று பிரார்த்தனை செய்தல் வேண்டும்.

இறைவனின் இறவா நெறியைப் பெறுதலே நாம் மனித சரீரம் எடுத்ததின் நோக்கமாகும். இறவா நெறியை எமக்குத் தருவது கடவுள் வழிபாடாகும். இதனை நாமெல்லாம் முற்றாக மறந்து உண்டு உடுத்து இன்பமாவதே மேலான நெறியென்று எண்ணி விலங்கினத்தைப்போல் வாழ்கின்றோம். இங்ஙனமாக நாம் வாழுங்கால் உலோகாயதக் கொள்கையினர் கடவுள் எங்கிருக்கின்றார்? அவரது வடிவமென்ன? என்றெல்லாம் பிதற்றுகின்றனர். அவர்களுக்குத், திருநாவுக்கரசு நாயனர் தேவாரம் விடை பகருகின்றது, அப்பாடலைச் சற்று நோக்குவாம்.

"விறகிற் றீயினன்
பாலிற்படு நெய்போல்
மறைய நின்றுளன்
மாமணிச் சோதியான்
உறவு கோல்நட்
டுணர்வு கயிற்றினல்
முறுக வாங்கிக்
கடையமுன் நிற்குமே"

இறைவன் ஆலயத்திலே ஆன்மாக்கள் வழிபடும் பொருட்டுச் சாந்நித்தியராய் எழுந்தருளியிருப்பார் என்பது ஆகமநூற்றுணிபு. ஆகையால் நாமனைவரும தினசதோறும் ஸ்நானஞ்செய்து தோய்த்துலர்ந்த வஸ்திரந்தரித்து விபூதி அணிந்து ஆலயத்திற்குச் சென்று கடவுளை வணஙக வேண்டும். அங்ஙனம் தினந்தோறும் போக இயலாதவர்கள் விஷேட காலங்களிலாயினும் சென்று வணங்க வேண்டும். அத்துடன் ஆலயத்திலே சம்மாலியன்ற, திருத்தொண்டுகள் செய்ய வேண்டும், அவ்வாறு தொண்டு செய்வோமானல் எமது ஆன்மா பரிசுத்த நிலையை அடையும் திருத்தொண்டின் வகைகளைத் திருவாதவூரடிகள் புராணத்தில் பரமாசாரியர் மணிவாசகப் பெருந்தகைக்கு உபதேச மொழியாகக் கூறுமுகமாகக், கடவுள் மாமுனிவர் மிக அழகாகக் கூறுகின்றார், அப்பாடலை உற்று நோக்குவாம்;

(தொடர்ச்சி 3-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பரமேஸ்வரக் கல்லூரியில் நவராத்திரி பூசை

மேற்படி கல்லூரியின் மூல நிலையமாய்த் திகழும் பரமேஸ்வரர் ஆலயத்தில் நிகழும் நந்தனஆண்டு புரட்டாதி மீ 4-ந் தேதி (19-9-52) வெள்ளிக்கிழமை கும்பஸ்தாபன வைபவம் நடைபெறும். அன்று தொடக்கம் ஒன்பது நாட்களும் காலை 10 மணி தொடக்கம் மாலை 2 மணி வரைக்கும் பரமேஸ்வரர் ஆலயத்தில் பரமேஸ்வரருக்கு விசேஷ அபிஷேக பூசை விழாக்களும், அம்பாளுக்கு மகா நைவேத்ய அஷ்டோத்தரசத அர்ச்சனைகளும் நடைபெறும். சங்கீதப் பிரியையாகிய அம்பாளுக்கு, அவள் தவத்திலிருக்கும் சந்நிதியில் ஒன்பது நாட்களும் விசேஷ இசை நிகழ்ச்சிகள் நடைபெற ஒழுங்கு செய்திருக்கின்றனர். என்றும் அன்பர்கள் அனைவரும் சென்று திருவருட் பிரசாதம் பெற்றேகுமாறு வேண்டப்படுகின்றனர்.

### ஒரே ஈரலுள்ள இரு பிள்ளைகள்

சென்னை அரசாங்கப் பிரதம வைத்திய நிலையத்துக்குக் கொண்டுவரப்பட்ட ஒரே ஈரலுள்ள இரு பிள்ளைகளும் சத்திர வைத்தியம் செய்து பிரிக்கப்பெற்றுச் சிறிது காலத்தின் பின் இறந்துவிட்டார்களென அறிய வருகின்றது.

## செயற்கை மழை

Dr. S. K. பனேர்ஜி அவர்கள் கல்கத்தாவிலே முப்பது முறை முயன்று இருபத்தைந்து முறை தாம் நல்ல மழை பெய்வித்ததாகக் கூறுகிறார். மக்கட் செய்கை அமெரிக்காவிலே நடக்க, மழைச் செய்கையோடு இந்தியாவிலே முகிற் செய்கையும் கைவருமானால் உலகில் வேறு வேண்டுவதுதான் என்ன?

### அநீதிச் சட்ட எதிர்ப்புக்கு அமெரிக்க ஆதரவு

நேட்டால் இந்தியமகாநாட்டு உப தலைவர் திரு. அஷ்வின் சவுத்திரி அவர்கள் டேர்பன் கூட்ட மொன்றிலே பேசும்போது, அநீதிச் சட்ட எதிர்ப்பை ஊக்கமாய் முன்னேற்றும்படி எமக்கு ஊக்கந்தந்து ஸ்ரீமதி ரூஸ்வெல்ற் அவர்கள் எனக்கு ஒரு கடிதமெழுதியிருக்கின்றார். அக்கடிதத்தை மந்திரி மலானுக்கு உதவுகின்றேன் என்றுகூறி அமெரிக்க தேசத்தின் ஆதரவுக்கு இது அறிகுறியென் றெடுத்துக்காட்டினர்.

## ஆன்ம ஈடேற்றத்துக்கு அரன்வழிபாடு அத்தியாவசியகம்

2-ம் பக்கத் தொடர்ச்சி

"ஆவலாலெமக் காமலர்
மாலைகளாக்க லம்மவர்
பறித்தலம் மலராற்
றுவிலாவகை தார்பல
சமைத்த றணப்பி லெம்புகழ்
சாற்றலன் புடனு
மேவு மாலய மலகிடன் மெழுகல்
விளக்க நல்விளக்
கிடுதலெம் மடியார்க்
கேவ லானவைசெய்தலிச்சரியை
யியற்ற வல்லவர்க்
கெம்முல களிப்போம்"

இக்காலச் சைவமக்கள் ஆலயத்துக்குச் செல்வதற்கும் வெட்கப்படுகின்றார்கள். ஆலயத்துக்குச் சென்றாலும் வணங்குவதற்கும் கூசுகின்றார்கள். என்னே காலத்தின் செயல்! ஆண்டவன் சந்நிதானத்துக்குச் சென்று ஆண்டவனை வணங்கி அவனருளைப் பெறுவதற்கும் பின்னிடுகின்றார்கள். இவர்கள் இவ்வாறு செய்வதனால் தம்மைத் தாமே கெடுப்பதுமல்லாமல் தமது சமயத்தையும் இகழ்கின்றார்கள். மற்றும் சமயத்தவர்கள் தங்கள் சமயத்தில் கடவுளில் எவ்வளவு நம்பிக்கை யுடையவர்களா யிருக்கின்றார்கள். அதைப் பார்த்தாவது நமது சைவசமயிகள் திருந்தமாட்டார்களா?

எனவே நாம் அனைவரும் மேற்குறிப்பிட்டவைகளை உற்று உணர்ந்து எமது சைவசமய முறைப்படி கடவுள் வணக்கத்தைச் செய்ய வேண்டும். அத்துடன் இளைஞர்களுக்கும் இயன்றளவு பயிற்ற வேண்டும். கடவுள் வணக்கத்துக்கு முக்கிய இடமான ஆலயங்களை இயன்றவரை புனிதமாகவும் கிரமமாகவும் நடத்த வேண்டும். இங்ஙனம் நாம் செய்வோமானால் மேன்மைகொள் சைவநீதி உலகெலாம் விளங்கும்.

"உலகெ லாமுணர்ந்
தோதற் கரியவன்
நிலவு லாவிய
நீர்மலி வேணியன்
அலகில் சோதிய
னம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி
வாழ்த்தி வணங்குவாம்."

(பெரிய புராணம்)

## இரும்புச் சுரங்கம்

அம்பலாங்கொடை திரு K. P. பர்னாந்து என்பவருடைய காணியொன்றில் இரும்புச்சுரங்க மிருப்பதாய் அறிய வருகின்றது. அங்கே மாத்திரமல்ல அம்பலாங்கொடை கொஸ்கொடைப் பகுதிகளில் பல இடங்களில் இரும்புச் சுரங்கங்களிருப்பதாக அறிய வருகின்றது.

### தமிழ்த் தலைமை ஆசிரியா பதவி

ஒவ்வொருவருடைய தாரதரத்தை அறியும் பொருட்டு ஆசிரியர்களுடைய சேவைக்காலம் முதலியவற்றை அறியத்தரும் அட்டவணை யொன்றை அண்மையில் அமைக்குமாறு வித்தியா பகுதியார் ஆராய்ச்சி செய்கின்றனரென அறிய வருகின்றது. இது தலைமை ஆசிரியர் நியமனத்தில் நீதி நடப்பதற்கு உதவியாயிருக்குமென்று பலர் கருதுகின்றனர்.

### கைத்தொழிற் பாடசாலை

காரைநகர்க் கைத்தொழிற் பாடசாலையை ஐக்கிய முறையில் நடத்துவதற்கு ஓர் ஆலோசனைக்கூட்டம் மேற்படி கைத்தொழிற் பாடசாலை மண்டபத்தில் (19-9-52) வெள்ளிக்கிழமை மாலை 4 மணியளவில் நடைபெறுமென அறிய வருகின்றது.

## பாரதியார் ஞாபகார்த்த விழா

பரமேஸ்வரக் கல்லூரி தமிழ் மன்றத்தின ஆதரவின்கீழ் பாரதியாரின் ஞாபகார்த்த விழா சென்ற வெள்ளிக்கிழமை பரமேஸ்வரக் கல்லூரியில் திரு. கு. பூபாலசிங்கம் அவர்கள் தலைமையில் கொண்டாடப்பட்டது. அப்பொழுது தமிழினத்தின் கௌரவத்தைக் காப்பாற்றியவர் பாரதியார்தானென்றும் அவரது நீதியுரைகளைப் பின்பற்றி நடப்பதே நாம் அவருக்குச் செய்யும் அரும் பணியாகும் எனறும் இக்கூட்டத்திற்குத் தலைமை வகித்துப் பேசின திரு. கு. பூபாலசிங்கம் குறிப்பிட்டார். அடுத்ததாக திரு. ச. தர்மராசா அவர்கள் பேசுகையில் பாரதியார் ஒரு புதுமைக் கவிஞரென்றும் மக்கள் வாழ்வின் மறுமலர்ச்சிக்கு அவரே காரணர் என்றும குறிப்பிட்டார். பின் திரு. த. கனகநாதலிங்கம் அவர்கள் பேசுகையில் பாரதியாரின் ஞாபகார்த்த விழாவைக் கொண்டாட யாழ்ப்பாணத்திலுள்ள தமிழ்த் தலைவர்கள் முன்வராதது வருந்தத்தக்கது என்று குறிப்பிட்டார். பின் திருவாளர்கள் - ச. நடராசா, பொ. திருஞானசம்பந்தர், கு. கனகசபை, மு. ஞானப்பிரகாசம, வை. இராசையா முதலியோர் பாரதியாரின் பெருமையைக் குறித்துப் பேசியபின் திரு. ச. பாலசிங்கம் அவர்களின் பாரதியார் பாடல்களுடன் கூட்டம இனிது நிறைவெய்தியது.

### நிறத்துவேஷமற்ற நீதிபதி

வெள்ளைய ரல்லாதார் நாற்பதுபேர் தென்னாபிரிக்காவிலே வேறு வீட்டுவசதி யில்லாமையால் வெள்ளையருடைய நிலத்தில உத்தரவு பெறாது வசித்து வந்தனர். அவர்களமீது வழக்குத் தொடரப்பட்டது. அவர்களைத் தண்டித்தல வெட்கமென்று கூறி விடுதலை செய்தார் நீதிபதி.

## நேயர்கள் நெஞ்சம்

ஆசிரிய அன்ப!

## வள்ளுவர் உள்ளத்தின் வளம்!

திருவள்ளுவரின் திருவுள்ளச் சிறப்புத் திருக்குறளின்கண் யாண்டுங் காணலாம். இத் திருக்குறளின் பலதிறப்பட்ட பெருமையைக் குறிக்கும் பெயர்கள் பலவுள. அவற்றுள், பொய்யாமொழி, தெய்வநூல், தமிழ்மறை, பொதுமறை என்பவற்றை உற்று நோக்கும்பொழுது இவ்வொப்புயர்வில்லாத் தனிப் பெருந்தமிழ் நூல் தரும் பொருள் இது இதுவென இயம்புதல், எளிதாமோவென எம்போலியர் அஞ்சுவோம். ஆகலின் அஃது கற்றறிந்தோர் கடனேயாகும்.

உருவ அமைப்புப் பல திறப்பட்டாற்போல அறிவு அமைப்பும் பல திறப்படும். அறிவுத் திறத்துக்குத் தக்கவாறு நூல்களுக்குப் பொருள் கூறப்படும். பல்வகைக்கூற்றுக்களும் ஓரோ வழிப்பயன் தருவனவேயாம் எனினும் தமிழ்மறை என்னுந் தனிப்பெருஞ் சிறப்புக்குத் தக்கவாறு வேதசிவாகமப் பொருள் விளங்குமாறு உரைவளந் திகழ்தல் எஞ்ஞான்றும் சிறப்புடைத்தே! மறைப்பொருள் மறைந்த மனத்தர் மலிந்த இக் காலத்திலே, திருவள்ளுவர் திருவுள்ளத்தைத் தெரிக்கும திருத்தொண்டை மேற்கொண்ட 'வித்துவான் திரு. த. வடிவேலு அவர்கள்' மறைப்பொருளானது மேலும் மறையாதவாறு விளக்குவாரா யின் அவரது தொண்டு வாயார வாழ்த்துதற்குரியதாகும்.

அவர் எழுதிப்போந்த உரைகளுள்ளே ஒரு சில கருகல்கள் இருப்பதாக உன்னி அவற்றுள் ஒரு சிலவற்றை ஈண்டுத் தருகின்றேன். அவற்றை விளக்கியுதவுவதோடு மேல்வருவனவற்றுக்கும் ஆண்டாண்டு வேண்டிய விளக்கங்களையும் எம்போலியர் விழைவை யறிய நில்லாது தாமாகவே உதவுவாரென் றுநம்புகின்றேன்.

(1) 5-9-52ல் வெளிவந்த கட்டுரையில் "அழியா நிலைத் தாயமொழிகளெல்லாம்" "அ" என்ற முதலையுடைய தமிழ் மொழி........ அழிந்தொழியவில்லை. இனிமேலும் அழிந்தொழியப் போவதில்லை"

(2) 9-9-52ல் வந்த கட்டுரையிலே "அதற்கு மனிதன் நல்வினையோ தீவினையோ விழையாது இருவினையும் நீக்கி வாழ்தல் வேண்டும். அவனே இறைவன் பொருள்சேர் புகழ் புரிந்தோனவன். கடவுளின் உண்மை நிலையுணர இருவினை செய்யும் விழைவும் நீங்குமென்பதே அவர் துணிபு! என்பவற்றிலுள்ள கருகல்கள் ஈண்டுத் தருதும்.

1. எழுத்து மொழி என்பவை சடப்பொருள்கள். சடப்பொருள் அழியுந் தன்மையது. எனவே "அழிந்தொழியப் போவதில்லை" என்பது எத்தன்மையைத் தெரிப்பதென்பது விளங்கவில்லை.

2, இறைவன் பொருள்சேர் புகழ்புரிதல் இருவினை நீக்குதற்குச் சாதனமாகத் தோன்றுகின்றது. அஃதே ஆசிரியர் கருததுப்போலும்? ஆகவே இறைவன் பொருள்சேர் புகழ் புரிந்தோனுதற்கு இருவினையும் நீக்கி வாழ்தல் வேண்டும எனப் பொருள் தரும் கூற்று விளங்கவில்லை.

இவற்றின் விளக்கம் வேண்டப்படுகின்றது. மேல் வரும் கட்டுரைகளில் இத்தகைய வேண்டுதல்களுக்கு எதுவுண்டாகாது வேண்டிய விளக்கங்கள் தயவாக வருமென்றெதிர் பார்க்கின்றேன்.

திருக்குறள் மாணவன்.
வண்ணார்பண்ணை,
16-9-52.

## உங்கள் நக்ஷத்திரம்?

எங்கள் சோதிடம்

ஸ்ரீ ராதாகிருஷ்ணன் கணிப்பது.

இவ்வாரப் பலன்கள் 21—9—52——27—9—52

**மேடராசி** அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்.

இந்த வாரம் சில தகுந்த மாற்றங்கள் செய்வீர். எதிர்ப்பு அற்றுப்போம். தனலாபமும நிச்சயம் ஆனல் மனச் சமாதானமிராது. செவ்வாய் இரவு, புதன் வியாழன் கவனமாய்க் கழிக்க வேண்டும்.

**இடபராசி** கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்.

உம்முடைய விஷயங்களிற் சலனமான காலம். விஷயங்களைத் தீர்மானிப்பதிற் கஷ்டமிருக்கும். வார இறுதியில் நண்பர் சிறிது பண நெருக்கடி உண்டாகக்கூடும். வெள்ளி சனி கவனமாய்க் கழிக்க வேண்டும்.

**மிதுனராசி** மிருகசீரிடம், 3, 4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3.

இந்த வாரம் நண்பரை அதிகம் நம்பவேண்டாம். வண்டிகள்மூலம் செலவுக்குமிடமுண்டு. புது முயற்சிகள் கவனமாய்க் கையாள வேண்டும். சண்டைகள் விரைந்து தொடருவீர்.

**கடகராசி** புனர்பூசம் 4ம்பாதம் பூசம் ஆயிலியம்.

இந்த வாரம் பணநிலை அதிகம் இருக்கும். சகோதர சகோதரிகள் உதவி நிச்சயம். சிறிது ... வார இறுதியில் நன்மைபயக்கும்.

**சிங்கராசி** மகம், பூரம், உத்திரம, 1ம் பாதம்.

இந்த வாரம் சண்டைகள் விரைந்து தொடருவீர். ஆனல் நீர் வெற்றி பெறுதல் நிச்சயம். செலவு அதிகரிக்கும், பெரும்பகுதி வண்டிகள் மூலமாகும். சூதாடியின் அதிட்டத்தைப் போன்ற அதிட்டம் வார இறுதியில நிச்சயம்.

**கன்னிராசி** உத்திரம் 2,3,4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

இந்த வாரம் எந்த ஒரு புதுக் காரியத்தைத் தொடங்குவதிலும் கஷ்டமடைவீர். பணநிலையும் நல்லாயிராது. நண்பருக்கு உதவி செய்ய எல்லைகடந்து போகவேண்டாம்.

**துலாம்** சித்திரை 3,4ம் பாதம் சுவாதி விசாகம் 1,2,3ம் பாதம்

அதிக எதிர்ப்பிருந்த போதிலும் இந்த வாரம் உம்முடைய முயற்சிகளிற் சித்தி யெய்துவீர். பெண்ணின நண்பர் பேருதவியாயிருப்பர். பெறுகிற பணம் முழுதும் வார இறுதிக்கு முன் செலவழிப்பீர்.

**விருட்சிகராசி** விசாகம் 4-ம் பாதம் அநுஷம், கேட்டை.

ஆரம்ப ஏமாற்றங்களின் பின் இந்த வாரம் சில சித்திகளை நிச்சயம்தரும். புதுப் பகைவரை உண்டாக்கவேண்டிவரும் வார இறுதியில் உத்தியோகத் தொந்தரவுக் கிடமுண்டு.

**தனுராசி** மூலம் பூராடம் உத்தராடம் 1 ம் பாதம்.

இந்த வாரம் புது முயற்சிகளில் நல்ல பலன் நிச்சயம். அதிக தொந்தரவில்லாமல் உம்முடைய திட்டங்களை நிறைவேற்றக் கூடியதாயிருக்கும். வார இறுதியில் மேலதிகாரிகளிடமிருந்தும இனத்தவரிடமிருந்தும் உதவி வருதல் நிச்சயம்.

**மகரராசி** உத்தராடம 2,3,4ம பாதம்திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்.

இந்த வாரம் பணத்துறைகளில் சடுதியான திருத்தம நிச்சயம். மானபங்கங்களுக்கும் சிறு உத்தியோகத் தொந்தரவுகளுக்குமிடமுண்டு. ஆனல் அதிகம் தாக்குண்டு போகமாட்டீர்.

**கும்பராசி** அவிட்டம் 3, 4ம் பாதம, சதயம, பூரட்டாதி 1, 2, 3 ம் பாதம்.

ஞாயிறு காலை உம்மைச் சிறிது நிலைகுலையக்கூடும். வார மிகுதியும் அதிகம் நலமாயில்லை. ஆனல் வேண்டியவற்றை நீர் செய்விக்கக் கூடியதாயிருக்கும, புது வியாபாரங்களைப் பின்போடுக.

**மீனராசி** பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி.

இந்த வாரம் குடும்பத் தொந்தரவுக்கிடமுண்டு. ஞாயிறு பிற்பகல் திங்கள் செவ்வாய் உம்மை அதிகம் நிலைகுலைக்கக்கூடும். சித்தி வேண்டுமானல் இந்த நேரம் இன்பம் நுகர்தலை ஒருபக்கம்விட்டுக் கையிலிருக்கும் வேலையிற் கவனம செலுத்துதல் நன்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரி வளம் கூறிய வள்ளுவர்

( முதலாம்பக்கத் தொடர்ச்சி )

"கெடுப்பதூஉங் கெட்டார்க்குச்
சார்வாய் மற்றங்கே
எடுப்பதூஉ மெல்லா மழை"

மழைபெய்யாது நின்று உலகினரைக் கெடுக்கின்றது, பின்பு தன் செயலாற் கெட்டோரை மழை தானே உதவி உயரச் செய்கின்றது. இதனால் உலகினை ஆக்கவோ அழிக்கவோ தக்க ஆற்றலுடையது மழையே யென்பதை யறிவுறுத்துகிறார்.

"விசும்பிற் றுளி வீழினல்லான்
மற்றங்கே
பசும் புற்றலை காண்பரிது"

மேகங்கள் மழைத் துளிகளை நிலத்திற்குதவவேண்டும்; அப்பொழுதான் நிலம பசுமையடையும். பசுமை பெற்ற நிலத்திலுள்ள புல் விதைகள்தானும்முளைக்கும். மழையில்லையானல் ஓரறிவயிரான புல்லுமே தலையெடுத்தலில்லை.

"நெடுங் கடலுந் தன்னீர்மை
குன்றுந் தடிந்தெழிலி
தானல்கா தாகி விடின்"

மழையில்லா விட்டால் பரந்த கடலும் தன் தன்மையிற் குறைவடைகின்றது. மேகம் கடல்நீரை ஆவியான நிலையில் தன்பாற் பெற்றுக்கொள்ளுகின்றது. மீண்டும் அக்கட லிடத்துமே மழையைப் பெய்கின்றது, கடல் நீர் மழை நீரைப் பெறவில்லையானல் கடலிலுள்ள உயிர்களுமே வாழ்தலில்லை. கடலிலுள்ள உயிர்கள் இறந்தொழியுமானல் கடல் எவ்வித பெருக்கமுடைத்தாக விளங்கினும் உலகினர் அதனை மதித்தற் கேற்ற பெருமை அதற்கில்லை. கடலிலுள்ள உயிர்ப்பொருள்களிலிருந்து கிடைக்கும் முத்து முதலாம் பொருள்களில்லையெனவே தன்பெருமையை இழக்கின்றது.

"சிறப்பொடு பூசனை செல்லாது
வானம்
வறக்குமேல் வானோர்க்குமீண்டு"

மழை நல்காவிட்டால் உலகமுய்யாது எனக்கூறிவந்தவர் இவ்வுலகு மாத்திரமன்று வானுலகே உய்யாதென்கிறா. வானுலகத்தே வரும் இவ்வுலக மக்களையே நம்பி வாழ்கின்றனர். இவ்வுலக மக்களாலியற்றப்படும், விழாவும் பூசனையும் வானுலகத் தேவரைக் குறித்தே செய்யப்படுகின்றன. இவ்வுலகில்லையானல் தேவர்கள் பொருட்டாற்றப்படும் விழவுமில்லை. எனவே தேவர்களும் பூசனையாற் பெறும் பயனொழிந்து வறுமையடைவர்.

"தானந் தவமிரண்டுந்
தங்காவியனுலகம்
வானம் வழங்கா தெனின்"

மழையில்லையானல் பொருளின் விளைவில்லை. விளைவில்லையெனவே தானஞ் செய்வதற்கு-தருமஞ் செய்வதற்குப் பொருளில்லை, பொருளில்லாமையால் தானஞ் செய்வோரும் தாமாற்றிய தானத்தையாற்ற வகையின்றி வாட்டமடைய வேண்டியதாகின்றது. உணவில்லை யெனவே விரதமென்ற சிறப்பியல்பும் இல்லையாகின்றது. உயிர்களனைத்துமே வாடும்பொழுது எல்லோர் நிலையும் இறக்கும்வரை தவநிலையேயாகின்றது. சிறப்பான தவநிலையைக்காண அதன் பயனை அனுபவிக்க உலகமில்லையெனவே தவமுமில்லையென்கின்றார்.

"நீரின்றமையா துலகெனின்
யார்யார்க்கும்
வானின்றமையா தொழுக்கு"

நீரின்றி உலகு நிலைபெறுதலில்லை யென்பதை விளக்கிய வள்ளுவன், இவ்வுலகை நிலைபெறச் செய்யும் மாண்பு வானுக்கே உண்டென்கின்றார். இங்கு வான் என்பது நாமிருக்கும் உலகு ஞாயிறு திங்கள் முதலாம் கோள்களனைத்துமே உலவுகின்ற எல்லையற்ற வெளியையே குறிக்கும். அவ்வெளியிடத்திலேயே மழை தரும் முகில்கள் உறைகின்றன எனவே மழைக்குரிய பெருமை முகிலுக்கேற்றப்பட்டு அம் முகிலின் பெருமையும் அது நிலைபெற்றுத் தங்கும் வானையே அடைகின்றது. அதனைக் கருத்திற்கொண்டே மழையின்றி உலகில்லையானல் வானின்றி மழையுமில்லை என்கிறார்,

உலகம் நிலைபெற மழையே முதற் காரணமெனக் கூறியவர், உலக வாழ்விற்கு உறுதுணையாய அறிவுநல்கும் நீத்தாரின் பெருமையை அடுத்தபடி கூறுகிறார்.

## தேவை

சுராவி சரஸ்வதி வித்தியாசாலையில் நெசவும், விசேட கைவேலையுங் கற்பிக்கும் சதைமை வாய்ந்த இரு ஆசிரியைகள் தேவை. இசையறிவுடையார்க்கு விசேட மதிப்பு உண்டு. மானேசர் சரஸ்வதி வித்தியாசாலை; சுராவி; என்ற முகவரியில் 15 . 10 . 52 க்கு முன் மனுச் செய்க.

மு. சதாசிவம்
காரியதரிசி

அராலி,
சரஸ்வதி மகாசபை.

M. 119 16, 19—9—52.

## நாரந்தனைத் தான்தோன்றி ஈஸ்வரி இளைஞர் சங்கம்

### ஆண்டு விழா

நாரந்தனைத் தான்தோன்றி ஈஸ்வரி இளைஞர் சங்கத்தின் ஆண்டு விழா சனிக்கிழமை (13.9-52)பி.ப 3 மணியளவில் தலைவர் திரு. க. ஈஸ்வரநாதன் தலைமையின்கீழ் ஆரம்பமாயிற்று. "அம்பாளின் மகிமை," "கடவுள் வழிபாடு," "பிரார்த்தனைக் கூட்டம்", "விபூதி" ஆகிய விஷயங்கள் பல இளைஞர்களால் பேசப்பட்டது. பெரியோர் பலர் இளைஞர்களின சைவ வளர்ச்சியையும், முன்னேற்றத்தையும் பாராட்டிப் பேசினர். சிறியோர் தேவார கீதம் பாடினர் பின் தலைவர் முடிவுரையுடனும் தேவாரத்துடனும் கூட்டம் முடிவடைந்தது.

## நச்சுப் பதார்த்த அப்பம்

இந்தியாவிலே நபாத்துவிப் என்னுமிடத்தில் ஹரிதாஸ்குந்து என்னும் ஒரு மாணவன் தன் நண்பன் வீட்டுக்குப் போனபொழுது ஒரு அப்பம் கொடுக்கப் பெற்றார். அவர் அதைத் தன்னுடைய பைக்குள் வைத்திருந்து வீட்டுக்குப் போனபின் அதை எடுத்துக் கடித்தவுடனே சுகவீனமுண்டாகி வாய்பேச முடியவில்லை. வைத்தியர் பார்வையிட்ட பொழுது நச்சுப் பதார்த்தத்தால் நாக்குப் பாதிக்கப்பட்டதாய் அறிய வந்தது.

குறித்த நண்பன் மறைந்துவிட்டார்! இக்காலத்தில் இத்தகைய சதிகளை நண்பர்களிடம் எதிர்பார்க்கவேண்டியிருக்கின்றது.

## பிரதம மந்திரியின் ஆணை

அரசாங்க செலவுகளுள் அவசியமற்றவையாகக் காணப்படுபவை எல்லாவற்றையும் நீக்கும்படி அரசாங்கத்திணைக்களத்தாருக்குப் பிரதம மந்திரி ஆணை கொடுத்திருக்கின்றார்


உ

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர்

## வெளியிட்ட நூல்கள்

| | | ரூ. ச. |
|---|---|---|
| கந்தபுராணம் (செய்யுள்) | ... | 8 00 |
| திருவிளையாடற் புராணம் செய்யுள் | ... | 8 50 |
| திருவிளையாடற் புராணம் வசனம் | ... | 2 00 |
| பாரதம் ஆதி பருவம் உரை | ... | 3 50 |
| சேது புராணம் | ... | 3 00 |
| இராமாயணம்—பாலகாண்டம் (குறிப்புரை) | | 2 50 |
| கந்தரலங்காரம் காண்டிகையுரை | ... | 3 50 |
| அருட்பா | ... | 1 75 |
| பெரியபுராண வசனம் | ... | 2 50 |
| சைவசமய நெறியுரை | ... | 1 25 |
| நாவலர் சரித்திரம் | ... | 1 25 |
| இலக்கணச் சுருக்கம் | ... | 1 00 |
| சைவ வினாவிடை இரண்டாம புத்தகம் | ... | 65 |
| முதலாம் பாலபாடம் | ... | 20 |
| மூன்றும் பாலபாடம் | ... | 65 |
| நான்காம் பாலபாடம் | ... | 1 75 |
| சிவாலய தரிசன விதி | ... | 20 |
| அபிராமியந்தாதி யுரை | ... | 25 |
| திருக்குறள் உரை | ... | 5 00 |
| திருக்கோவையார் உரை | ... | 3 00 |
| திருமுருகாற்றுப்படை | ... | 25 |
| வில்லிபுத்தூராழ்வார் பாரதம் | ... | 3 00 |
| சைவ வினாவிடை | ... | 20 |

இங்கே பெற்றுக்கொள்ளலாம்.

வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

மனேசர், சைவப்பிரகாச யந்திரசாலை.



திறமான
தேக்க மரங்கள்
பல தினிசுகளிலும்

திறமான
ருணிமார்க்ஓடுகள்
13¾, 14 இஞ்சிகளிலும்

வந்திருக்கின்றன

தேவைப்படுவோர் உடனே ஆடர்செய்யவும்

சேகரம் & சன்ஸ்
ஆஸ்பத்திரிறோட், யாழ்ப்பாணம்.

Std. 2



L.K.S. LEBBAY BROS
GOLD HOUSE

நல்லவாட்சிகள் கிடைக்குமிடம்
எல். கே. எஸ்.
லெப்பை பிரதஸ்
தங்கமாளிகை
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

இலங்கையின்
மிகப்பெரிய
நகை
வியாபாரிகள்
=O=

தந்தி: "JEWELLERS"
போன்: 161.

ஸ்தானம்:
63, கன்னாதிட்டி
யாழ்ப்பாணம்.



## யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம்ஆண்டு ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர்மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா
134,3670
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்று 1ரூபா விகிதமாக 75 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப்பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்.

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்கவிதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாகோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 12 விகிதம் அறவிடப்படும். (ஈடு வைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை
சிறுப்பர்.

Std. 14 20-11-46—20-11-49.



நீங்கள் இளமைப் பருவத்தையடைய
சி. எம். சாமி
தங்க பஸ்பம்
உபயோகியுங்கள்

தாதுபுஷ்டியைத் தருவதில் சிறந்தது.
இதற்கு நிகரானமருந்து வேறு ஒன்றுமில்லை.

அபார தாது புஷ்டியும், பலமும், பசியும், இரதத விருத்தியும் உண்டாக்கும். இல்வாழ்க்கையில் அதியற்புதசுகந்தரும. நீரழிவு பவுத்திரம், மூலம், குன்மம, இடுப்புவலி, வாய்வு, வெள்ளை, வெட்டை, நீர்க்கடுப்பு முதலிய சகல வியாதிகளையும் நீக்கும,

24 நாள் பஸ்பம் அனுபானத்துடன் விலை ரூ.25—0—0

குரு பஸ்பம் (தொய்வுக்கு)

தொய்வு, இருமல், ஈளை, கபம், காசம், மார்துடிப்பு தொண்டைவலி, க்ஷயம் முதலிய சகல வியாதிகளையும நீக்கும். அருமையானது.

24 நாள் புட்டி 1க்கு விலை ரூபா 20

மலையப்பசாமிவைத்தியசாலை பழனி S I
(கியாட்லாக் இனும்)

M. 16. 25-4-52—25-10-52.


Printed and Puplished by S. P. Kandiah, F. I. S. A. (Lond) residing at 245; Navalar Road Jaffna. for and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannarponna, Jaffna on Friday, September 19. 1952.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org